திரு. எம். வி. கரிவேங்கடம் : சுற்றுலா பஸ்களுக்கும், சாதாரண பஸ்களுக்கும் என்ன வரி விகிதம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி போட்டால் ஷெட்யூல் பூராவையும் மேஜை மேல் வைக்கத் தயாராக இருக்கிறேன்.

### *New State Transport Bus Routes*

* 33 *Q.*—Sri K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representations have been made recently, for the starting of new bus routes between Mayuram and Coimbatore (via) Mayuram, Kumbakonam, Thanjavur and Tiruchirappalli and between Mayuram and Madurai by the State Transport Department; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) There is no such proposal under consideration.

புலவர் கா. கோவிந்தன் : சில பாதைகளில் பொதுமக்கள் நன்மையை உத்தேசித்து புதிய பஸ்கள் விடப்படுகின்றன. அங்கு ஏற்கெனவே இருக்கின்ற பழைய பஸ் முதலாளிகள் தங்களுக்கு அதனால் பாதகம் ஏற்படுகிறது என்று சொல்லி வழக்குத் தொடருகிறார்கள். அதிலே அவர்களுக்குப் பாதகமாக இருக்கிறது என்று சொல்லி நீதி மன்றங்கள் புதிய பஸ்களை நிறுத்தி விடுகின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் சட்டம் இருக்கிறது. சட்டம் அப்படி இல்லாமல் பொதுமக்களுக்கு வசதி செய்யக் கூடிய முறையில் மாற்றியமைக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரித் தடை உத்தரவுகள் எல்லாம் ஹைகோர்ட்டால் பிறப்பிக்கப்படுகின்றன. சட்டத்தின்படி சட்ட விரோதமானது, விதிகளுக்கு மாறானது, புறம்பானது என்று ஏதாவது காரணம் இருந்தால் அந்த விதமான தடையுத்தரவுகளைப் போடுவார்கள். அந்தந்த இடம், சூழ்நிலைகளுக்கேற்ப அந்த உத்தரவுகள் போடப்படுகின்ற காரணத்தால் இதற்குச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஜட்ஜிடந்தான் விடவேண்டும்.

திரு. ஆ. தங்கவேலு : அரசாங்கம் விடுகிற எக்ஸ்பிரஸ் பஸ்கள் பொது மக்களுடைய வேண்டுகோளின் பேரில் விடப்படுகின்றனவா ? அல்லது அரசாங்கமே ஆலோசனை செய்து விடுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டும்தான்.

திரு. ம. கமலநாதன் : புதிதாக பஸ் பெர்மிட்டுகள் கொடுப்பதற்கான விதிமுறைகளை கடைப்பிடித்து வந்தது சரியல்ல என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்ததற்குப் பிறகு இப்போது என்ன விதிமுறைகள் அனுசரிக்கப்பட்டு பஸ் பெர்மிட்டுகள் கொடுக்கப்படுகின்றன ?

30th July 1965]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு, விதிமுறைகள் போடக்கூடாது என்பது. அதனால் நாங்கள் விதிமுறைகள் போடவில்லை.

**திரு. எம். தண்டாயுதபாணி :** சென்னையிலிருந்து மாயவரம், கும்பகோணம், பட்டுக்கோட்டை வழி ராமநாதபுரத்திற்கு பஸ் விடும் உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது நோட்டிபை செய்ததாக ஞாபகம் இருக்கிறது.

**திரு. க. தா. பெருமாள் ராஜு :** கோவையிலிருந்து மைசூருக்கு திம்பம், தாளாடி வழியாக அரசாங்க பஸ் விட டெவலப்மெண்ட் கவுன்சிலில் இருந்து தீர்மானம் வந்திருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தத் தகவல் என்னிடமில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நாகப்பட்டிணத்திலிருந்து திருத்துறைபூண்டி, மன்னார்குடி, வடுவூர், தஞ்சாவூர் வழி கோவை அல்லது நாகர்கோவில் செல்லும் பஸ்ஸை விட அரசாங்கம் உத்தேசிக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த ராஜ்யத்தில் உள்ள எல்லா இடங்களைப் பற்றியும் கேட்டால்—எனக்கு நல்ல ஞாபக சக்தி இருக்கிறது என்று நினைத்து வந்திருக்கிறேன், இருந்தாலும் என்னையே மீறிப்போகிறது என்று நினைக்கிறேன்.

**திரு. வை. சங்கரன் :** தெற்கிலிருந்து வடக்கு வரை போகும் பஸ்களை எடுத்துக் கொண்டால் மதுரை, கோவை, திருச்சி போன்ற ஜங்க்ஷன்களில் இரண்டு ரூட்கள் சேரும்போது ஒரு ரூட்டிலிருந்து அடுத்த ரூட்டுக்கு லிங்க் செய்து விடும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கூடுமான வரை அப்படித்தான் செய்யப்படுகிறது. இன்னும் சில சட்டங்கள், விதிகள் இருக்கின்றன. தொழிலாளர்களுடைய வொர்க்கிங் அவர்ஸ் இருக்கிறது. எல்லாவற்றையும் கவனித்துத்தான் நேரம் நிர்ணயிக்கப்படுகிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** பகல் காலத்தில் துரித பஸ்கள் விடுவது போல் இராக்காலத்திலும் துரித பஸ்கள் விட சர்க்காருக்கு அபிப்பிராயம் இருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவ்வாறு இரவு காலத்தில் துரித பஸ் விடுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறோம்.

**திரு. அ. ராகவ ரெட்டி :** புதிதாக கொடுக்கப்படும் ஒவ்வொரு பஸ் ரூட்டும் கோர்ட்டுக்குச் செல்லாமல் தொடர்ந்து நடத்த இயலாமல் இருக்கிறது. ஆகவே கோர்ட்டுக்குச் செல்லாமல் இருக்க ஒரு சட்டத்தைப் போட்டு எல்லோரையும் கோர்ட்டுக்கு அனுப்பாமல் இருக்க ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

[30th July 1965

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சர்க்காருக்கு சரியான சர்வாதிகாரம் இருந்தால்தான் அதைத் தடை செய்ய முடியும்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** சில பஸ் ரூட்களில் ஒரே ஓனர் பஸ் விடுவதால், மொனுப்பலி இருப்பதால் பூராவையும் கவனித்து செய்ய முடியாததால் பிரயாணிகளுக்கு சௌகரியம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, மொனுப்பலி இல்லாமல் மற்ற கம்பெனிகளுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கூடுமானவரை மொனுப் பலி ரூட் கொடுப்பதில்லை. மொனுப்பலி ரூட்ஸ் இருக்க வேண் டாம் என்பதுதான் சர்க்கார் அபிப்பிராயம். ஆனால் சிலயிடங் களில் ஆங்காங்கு தனிப்பட்டவர்கள் நல்ல சேவை செய்திருக் கிறார்கள் என்றும் பொது மக்களிடத்தில் இருந்து எந்த விதமான புகாரும் வரவில்லை என்றும் இருந்தால் அப்போது அந்த இடங் களுக்கு மட்டும் விதிவிலக்கு கொடுக்கப்படுகிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** இராக் காலத்தில் துரித பஸ்கள் விடுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அண்டை மாநிலங்களில் அந்த விதமாக இராக் கால பஸ் விடப்படுகிறது. அதே மாதிரி நாமும் ஏன் விடக்கூடாது என்று சொல்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நம் ராஜ்யத்தில் லாரி டிராபிக் ரொம்ப அதிகம். இரவு நேரத்தில்தான் லாரி டிராபிக் அதிகமாக சென்று கொண்டிருக்கிறது. அதனால் ஆக்சிடெண்ட்ஸ், விபத்துக்கள் ஏற்பட்டுவிடும் என்று நினைத்து நாம் அந்த முடிவை எடுத்திருக்கிறோம்.

**திரு. எம். எஸ். மணி :** வருமானம் அதிகமாக தரக்கூடிய பல ரூட்களில் தனியார்களுடைய எக்ஸ்பிரஸ் பஸ்கள் ஓடிக்கொண்டி ருக்கின்றன. அவற்றையெல்லாம் தேசியமாக்குகிற எண்ணம் அரசினருக்கு உண்டா ? அப்படியானால் எவ்வளவு நாட்களுக்குள் அது முடியும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சட்டசபையில் இது சம்பந்தமான மான்யக் கோரிக்கை விவாதம் நடக்கிறபோது சர்க்கார் கொள்கையை விளக்கமாகச் சொன்னேன். நூற்று இருபது மைலுக்கும் அதற்கு அப்பாற்பட்டதற்குமுள்ள நீண்ட தூர பஸ்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொள்வது என்றும் அதற்குக் குறைவாக உள்ள இடங்களில் தனியார்கள் பஸ் ஓட்ட சர்க்காருக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. அதை எடுப் பதற்கு உத்தேசமும் இல்லை.

**திரு. எம். தண்டாயுதபாணி :** சென்னையிலிருந்து தஞ்சைக்கு செல்லும் நான்கு பஸ்களில் ஒரு பஸ்ஸை பட்டுக்கோட்டை வரை நீட்ட அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எழுதியனுப்பினால் பரிசீலிக்கப்படும்.